செ.வெ.எண்-11 நாள்-05.03.2020

# அரியலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பட்டம் அளிப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பட்டம் அளிப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இவ்விழாவில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது,**

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 1964ஆம் ஆண்டு துவங்கப்பட்டு பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதில் முன்னணி தொழிற்பயிற்சி நிலையமாக செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது ஆண்டிமடத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகள் பட்டம் அளிப்பு விழா நடைபெற்றது. மூன்றாம் ஆண்டாக இன்று பட்டம் அளிப்பு விழா நடைபெற்றது. இதில் அரியலூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த 70 பயிற்சியாளர்களும், ஆண்டிமடம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த 30 பயிற்சியாளர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படுகிறது. இன்று பட்டம் பெறும் உங்களின் தனிச்சிறப்பு பிட்டர், டர்னர், வெல்டர், சீட்மெட்டல் வொர்க், ஒயர்மேன், டிராப்ட் மேன் உள்ளிட்ட 8 விதமான அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படும் தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளீர்கள். அதன் வாயிலாக நீங்கள் யாரிடமும் வேலைக்கு தேடி செல்லவேண்டிய தேவை ஏற்படாமல், இங்கு பெற்ற பயிற்சியினை பயனுள்ளதாக ஆக்கிக்கொண்டு தொழில் முனைவோர்களாக மாறி தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையில் முன்னேர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் ந.நாகராஜன் (அரியலூர்), முத்துகுமரன் (ஆண்டிமடம்), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் எஸ்.ஜி.ரமேஷ், அரசு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் ஏ.அசோக்ராஜன், மாவட்ட திறன் பயிற்சி அலுவலர் மு.செல்வம், நிர்வாக அலுவலர் இ.தனபால் மற்றும் பயிற்சியார்ளகள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**